செ.வெ.எண்:1 நாள்:01.02.2020

தூத்துக்குடி மாவட்டத்தில், உள் மாநில பெயர்வு திறன் திட்டம் நியாயவிலைக்கடையில் செயல்படுத்தப்பட்டதை, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்திவாசிய பொருட்களை வழங்கினார்.

---

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக்கடைகளிலும், உள் மாநில பெயர்வு திறன் திட்டம் இன்று (01.02.2020) முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள், கோரம்பள்ளம் அமுதம் நியாயவிலைக்கடையில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, திருநெல்வேலி மாவட்டம் மற்றும் வெளி தாலுகாவை சேர்ந்த குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்திவாசிய பொருட்களை வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள் மாநில பெயர்வு திறன் திட்டம் பரிசார்த்த அடிப்படையில் இன்று (01.02.2020) முதல் துவக்கப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில் 957 நியாயவிலைக்கடைகளில் சுமார் 4,93,842 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். கோரம்பள்ளம் பகுதியில் உள்ள அமுதம் நியாயவிலைக்கடையில் சுமார் 1246 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். அதேபோல் திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் 500 நியாயவிலைக்கடைகளில் 4,50,000 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். இவர்கள் மாதம் தோறும் பதிவு செய்யப்பட்ட நியாயவிலைக்கடைகளில் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொண்டு வந்தார்கள். தற்போது, உள் மாநில பெயர்வு திறன் திட்டத்தின் கீழ் ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை என்ற அடிப்படையில் இந்தியா முழுவதும் குடும்ப அட்டையை நியாயவிலைக்கடையில் காண்பித்து அத்தியாவசிய பொருட்களை பெறும் திட்டத்தின் முன்னோட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் முதற்கட்டமாக தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பரிசார்த்த முறையில் இன்று முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்துவதில் ஏற்படும். சிக்கல்களை ஆராய்ந்து தீர்வு காணப்படும். பின்னர் இத்திட்டம் மாநில அளவிலும், பின்னர், இந்தியா முழுவதும் செயல்படுத்தப்பட உள்ளது. குறிப்பாக, நியாயவிலைக்கடையில் உள்ள அத்தியாவசிய பொருட்களின் இருப்பு கண்காணிக்கப்படுகிறது. மேலும், கூடுதலாக இருப்பு வைத்துக் கொள்ள என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், தினந்தோறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களின் விவரங்கள் உள்ளிட்ட பல்வேறு விவரங்களை கண்காணித்து செயல்படுத்தப்படுகிறது. இன்று திருநெல்வேலி மாவட்டத்தை சார்ந்த திரு.ரவிசந்திரன் என்பவர் உள் மாநில பெயர்வு திறன் திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கோரம்பள்ளம் அமுதம் நியாயவிலைக்கடையில் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொண்டார். அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொண்டமைக்காக திரு.ரவிசந்திரன் என்பவருக்கு கைபேசியில் குறுஞ்செய்தி பெறப்பட்டுள்ளது. குடும்ப அட்டைதாரர்கள் மண்ணெண்ணெய் மட்டும் தாங்கள் பதிவு செய்து உள்ள நியாயவிலைக்கடையில் பெற வேண்டும். குடும்ப அட்டைதாரர்கள் அரிசி, சர்க்கரை, பாமியில் உள்ளிட்ட பொருட்களை உள் மாநில பெயர்வு திறன் திட்டத்தின் மூலம் அருகில் உள்ள நியாயவிலைக்கடைகளில் பெற்றுக் கொள்ளலாம். குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் குடும்ப அட்டை வைத்துள்ள வருவாய் கிராமத்தில் உள்ள நியாயவிலைக்கடைகளிலும், நகர் புறத்தில் ஒரே வார்டு பகுதிகளிலும், அத்தியாவசிய

பொருட்கள் இத்திட்டத்தின் மூலம் பெற இயலாது. பொது மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் பெறப்படும் போது ஏற்படும் சிரமங்களை தவிர்ப்பதற்காகவும், பிற மாவட்டங்களில் குடும்பத்தார் நிலை காரணமாக தற்காலிகமாக பணியாற்றும் பொது மக்களும் எளிதான முறையில் அத்தியாவசிய பொருட்கள் பெற்று பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்டம் ஏரலை சார்ந்த திருமதி.அஜிதா என்பவர் தெரிவித்ததாவது:-

அய்யா, நான் ஏரல் முக்காணி எனது சொந்த ஊராகும். அப்பகுதியில் உள்ள நியாயவிலைக்கடைகளில் அத்தியாவசிய பொருட்களை பெற்று வந்தோம். நான் வேலைக்காக தூத்துக்குடி கோரம்பள்ளம் பகுதியில் தற்காலிகமாக குடியிருந்து வருகிறேன். ஒவ்வொரு மாதமுமம் குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாயவிலைக்கடையில் அளிக்கப்படும் அத்தியாவசிய பொருட்களை பெற மிகவும் சிரமப்பட்டு வந்தேன் ஏனென்றால் எனது கனவர் வெளி மாவட்டத்தில் பணியாற்றி வருகிறார். நானும், தூத்துக்குடியில் இருப்பதால் சரியான முறையில் அத்தியாவசிய பொருட்கள் வாங்க இயலவில்லை. தற்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள் மாநில பெயர் திறன் திட்டம் இன்று முதல் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் எனக்கு கோரம்பள்ளம் பகுதியில் உள்ள அமுதம் நியாயவிலைக்கடைகளில் தேவையான அத்தியாவசிய பொருட்கள் கிடைத்தது. இத்திட்டத்தின் மூலம் அத்தியாவசிய பொருட்கள் நான் தற்காலிகமாக குடியிருக்கும் பகுதியில் உள்ள நியாயவிலைக்கடையில் கிடைத்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தினை தமிழகம் முழுவதும் செயல்படுத்தி என்போன்று தற்காலிகமாக குடியிருக்கும் பொது மக்களுக்கு ஏற்படும் சிரமங்களை தவிர்த்து பயனடைய செய்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் எனக் கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற திருநெல்வேலி மாவட்டத்தை சார்ந்த பயனாளி திரு.ரவிசந்திரன் தெரிவித்ததாவது:-

மாண்பபுமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தூத்தக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை என்ற திட்டம் இன்று முதல் செயல்படுத்தப்பட்டது. நான் வேலைக்காக தினந்தோறும் திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து தூத்துக்குடி மாவட்டத்திற்கு வந்து செல்வேன். இன்று உள் மாநில பெயர்வு திறன் திட்டத்தின் கீழ், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கோரம்பள்ளம் அமுதம் நியாயவிலைக்கடையில் அத்தியாவசிய பொருட்கள் எனக்கு கிடைத்தது. ஒவ்வொரு மாதமும் அரசால் வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களை பெற மிகவும் சிரமப்பட்டு வந்தேன். தற்போது, இத்திட்டத்தின் மூலம் தேவையான அத்தியாவசிய பொருட்கள் எளிதான முறையில் கிடைத்தது. இன்று பெறப்பட்ட அத்தியாவசிய பொருட்களின் விவரங்கள் அனைத்தும் எனது பதிவு செய்யப்பட்ட கைப்பேசியில் குறுஞ் செய்தியாக கிடைத்தது. இத்திட்டம் விரைவாக தமிழகம் முழுவதும் செயல்படுத்தி என்னைப் போல் பிற மாவட்டங்களில் இருந்து பல்வேறு இடங்களில் தற்காலிகமாக தங்கி பணியாற்றி வரும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் பயன்பெற வேண்டும். எனவே, இத்திட்டத்தினை உடனடியாக தமிழகத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்தி அரசின் நலத்திட்டங்களை பொது மக்கள் பெற செய்ய வேண்டும். உள் மாநில பெயர்வு திறன் திட்டத்தின் கீழ், பயன்பெறும் ஒவ்வொரு பயனாளிகளின்

சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசிற்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் எனக் கூறினார்.

அதனை தொடர்ந்து, உள் மாநில பெயர்வு திறன் திட்டத்தின் கீழ், தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் வட்டம், ஓட்டப்பிடாரம் வட்டம் மற்றும் ஏரல் பகுதிகளில் இருந்து பல்வேறு குடும்ப அட்டைதாரர்கள் தங்களது குடும்ப அட்டைகளை காண்பித்து தேவையான அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திரு.விஷ்ணு சந்திரன்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.அமுதா, தனி வட்டாட்சியர் (குடிமை பொருள் வழங்கல்) திருமதி.வதனாள், வருவாய் ஆய்வாளர் திருமதி.சுகுனா மற்றும் அலுவலர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.